රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා සහ පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | Combined Services Division
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතනය / தொலைபேசி / Telephone: 011- 2696211-13
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011- 2695279
ඊ- මේල් / மின்னஞ்சல் / E-mail: info@pubad.gov.lk
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Web Site: www.pubad.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: COM/Trans/V/වා.ස්.මා./2027
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2026.10.02

අමාත්‍යාංශ ලේකම්වරුන්

දෙපාර්තමේන්තු ප්‍රධානීන්

දිස්ත්‍රික් ලේකම්වරුන්

ප්‍රාදේශිය ලේකම්වරුන්

**2027 වාර්ෂික ස්ථාන මාරුවීම් - ( ඒකාබද්ධ සේවය)**
**රජයේ භාෂා පරිවර්තක සේවය, ශ්‍රී ලංකා තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණ සේවය, සංවර්ධන නිලධාරී සේවය, ශ්‍රී ලංකා රජයේ පුස්තකාලයාධිපති සේවය, කළමනාකරණ සේවා නිලධාරි සේවය, ඒකාබද්ධ රියදුරු සේවය, කාර්යාල සේවක සේවය**

මේ සමග අමුණා ඇති උපලේඛනයේ සඳහන් ස්ථාන මාරුවීම් 2027.01.01 දින හෝ නිලධරයන්ගේ නම් වලට ඉදිරියෙන් දක්වා ඇති දින සිට ක්‍රියාත්මක වන පරිදි අනුමත කරමි. මේ බව ඔබ අමාත්‍යාංශයේ / දෙපාර්තමේන්තුවේ/ කාර්යාලයේ අදාළ නිලධරයන් වෙත දන්වා නියමිත දිනයේදී අභිනව කාර්ය ස්ථානයේ වැඩ භාර ගන්නා ලෙස ඔවුන්ට දැනුම් දෙනු මැනවි. රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව / මැතිවරණ කොමිෂන් සභාව යන ස්ථානවලට ස්ථාන මාරු කරන ලද නිලධරයන්ගේ ස්ථාන මාරු ක්‍රියාත්මක විය යුත්තේ අදාළ ආයතන ප්‍රධානීන්ගේ එකඟත්වයට යටත්ව බවද දන්වමි.

02. ඒකාබද්ධ සේවයේ ස්ථානමාරු නියෝගවලට යටත් යම්කිසි නිලධරයෙකුට ඔබ අමාත්‍යාංශයේ/ දෙපාර්තමේන්තුවේ/ කාර්යාලයේ පිහිටුවා ඇති අභ්‍යන්තර ස්ථාන මාරු කමිටු මඟින් ස්ථාන මාරු නියෝග ලබා නොදිය යුතුය. යම්හෙයකින් අභ්‍යන්තර මාරු කිරීම් සඳහා නියෝග නිකුත්කර ඇත්නම් එහිදී ඒකාබද්ධ සේවයේ ස්ථාන මාරු නියෝගයන් ක්‍රියාත්මක විය යුතු වේ. එසේ වුවද නිලධරයන්ගේ ඉල්ලීම මත අමාත්‍යාංශ/ දෙපාර්තමේන්තු/ කාර්යාල අවශ්‍යතාවයන් මත අමාත්‍යාංශ/ දෙපාර්තමේන්තු/ කාර්යාල විසින් දී ඇති ස්ථාන මාරු නියෝග ක්‍රියාත්මක විය යුතු යැයි ඔබ අදහස් කරන්නේ නම් මෙම ලිපියේ 06 වන ඡේදයේ සඳහන් වන දිනට පෙර ඔබගේ නිර්දේශ ද ඇතිව අදාළ ඉල්ලීම සම්බන්ධයෙන් වැඩිදුර උපදෙස් ලබා ගැනීම මැනවි.

03. කිසියම් නිලධරයෙකුට 2027 වාර්ෂික ස්ථාන මාරු නියෝග මඟින් වෙනත් ස්ථාන මාරු නියෝගයක් ලබාදී ඇත්නම් පමණක් මීට ඉහතදී නිකුත් කර ඇති වාර්ෂික ස්ථාන මාරු නියෝගයක් බල රහිත වන බව සැලකිය යුතු වේ.

04. මෙම ස්ථාන මාරුවීම් සිදු කිරීමේදී මාරුවීම් කමිටුව විසින් අනුගමනය කරන ලද ස්ථාන මාරු පටිපාටිය, 2026.07.31 දිනැති අංක 04/2026 දරන ඒකාබද්ධ සේවා චක්‍රලේඛයෙහි ඇතුළත්ව ඇත. එම චක්‍රලේඛයෙහි හෝ අංක 2310/29 දරන අති විශෙෂ ගැසට් පත්‍රයේ ඇතුළත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්ය පටිපාටික රීති (කාණ්ඩ අංක 1) හි XVIII පරිච්ඡේදයේ විධිවිධානවලට අනුකූලව තමන්ගේ ස්ථාන මාරු ඉල්ලීම් පිළිබඳව වාර්ෂික ස්ථාන මාරු කමිටුවේ අවධානයට යොමු වී නොමැත්තේ නම් පමණක් වාර්ෂික ස්ථාන මාරු යෝජනා සමාලෝචන කමිටුව වෙත අභියාචනා ඉදිරිපත් කළ හැකිය.

05. රාජ්‍ය සේවා කොමිෂන් සභා ලේකම්ගේ අංක PSC/APL/07/14/2013 හා 2013.09.13 දිනැති ලිපිය මඟින් දන්වා ඇති රාජ්‍ය සේවා කොමිෂන් සභාවේ නියෝග අනුව වාර්ෂික ස්ථාන මාරු සමාලෝචන කමිටු තීරණය ලබා දීමෙන් පසුව නැවත සිදුකරනු ලබන අභියාචනා සම්බන්ධයෙන් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව විසින් තීරණ ලබාදෙනු ලැබේ. ඉන් අනතුරුව ඉදිරිපත් කරනු ලබන අභියාචනා, දුක් ගැනවිලි හේතුවෙන් හෝ දෙපාර්තමේන්තු ප්‍රධානීන්ගේ නිර්දේශ මත හෝ වාර්ෂික ස්ථාන මාරු තීරණ නියමිත දිනෙන් පසුවට කල් දමනු නොලැබේ. වාර්ෂික ස්ථාන මාරු සම්බන්ධයෙන් වූ අභියාචනාවකට රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව විසින් ලබා දුන් තීරණ, එකී තීරණ ක්‍රියාත්මක වීම වළකාලන නියෝගයක් නොමැති නම් වහාම ක්‍රියාත්මක කළ යුතුය.

06. ඒකාබද්ධ සේවයේ සියලු නිලධාරීන් වාර්ෂික ස්ථානමාරු සම්බන්ධ අභියාචනා ඉදිරිපත් කිරීම සඳහා අන්තර්ජාලයට පිවිසීමට https://misco.pubad.gov.lk/misco වෙබ් ලිපිනය භාවිතා කළ යුතු වේ. මාර්ගගත මෘදුකාංගය (Online Application) තුලට පිවිස, තම අභියාචනය 2026.10.16 දිනට පෙර ඉදිරිපත් කළ යුතු වේ. එම අයදුම්පතෙහි දෘඩ පිටපතක් ආයතන ප්‍රධානියා මඟින් වාර්ෂික ස්ථාන මාරු සමාලෝචන කමිටුව වෙත යොමු කරන ලෙසද කාරුණිකව දන්වමි.

07. 2027 වාර්ෂික ස්ථාන මාරු තීරණ යටතේ ඔබ කාර්යාලයෙන් පිටතට ස්ථාන මාරුවීමට නියමිත හා ඔබ කාර්යාලය වෙත ස්ථාන මාරුවී පැමිණීමට නියමිත ඒකාබද්ධ සේවයේ නිලධාරීන්ගේ නාම ලේඛන, මාර්ගගත මෘදුකාංගයේ Transfer -- Report යටතේ "Transfer Report – I" හා "Transfer Report –II" ඔස්සේ ලබා ගත හැක. එසේම ඔබ අමාත්‍යාංශයෙන් / දෙපාර්තමේන්තුවෙන් පිටතට ස්ථාන මාරුවීම් ලබාදී ඇති නිලධාරීන්, **අනුප්‍රාප්තිකයන් පැමිණෙන තෙක් රඳවා නොගෙන** නියමිත දින නව සේවා ස්ථානයේ රාජකාරි භාරගැනීමට හැකි වන සේ මුදා හැරීමට කටයුතු කරන ලෙස දන්වන අතර, මෙම ස්ථාන මාරුවීම් ප්‍රමාදයෙන් තොරව ක්‍රියාත්මක කළ යුතු බැව් ද දන්වමි. විධිමත් අනුමැතියකින් තොරව මෙම ස්ථාන මාරුවීම් නියෝග පැහැර හැර සිටින නිලධාරීන් සම්බන්ධයෙන් **අංක 04/2026 දරන ඒකාබද්ධ සේවා චක්‍රලේඛයෙහි 9.4 වගන්තිය අනුව හා වාර්ෂික ස්ථාන මාරු ප්‍රතිපත්තියේ 8 වන වගන්තිය අනුව කටයුතු කළ හැකි බවද දන්වමි.**

08. දැනට සේවය කරන කාර්ය ස්ථානයේ නියමිත කාලය සම්පූර්ණ කර නොමැති නිලධරයන්ට මෙම වාර්ෂික ස්ථාන මාරු වෙනුවෙන් ගමන් වියදම් ගෙවනු නොලැබේ. නියමිත කාලය සම්පූර්ණ කර ඇති නිලධරයන් සම්බන්ධයෙන් ආයතන සංග්‍රහයේ සඳහන් විධිවිධානවලට යටත්ව ගමන් වියදම් ගෙවිය යුතු වේ. උපවේශන දීමනා ගෙවනු නොලැබේ.

09. අමාත්‍යාංශයන්හි විෂය පථය වෙනස්වීම මත  ඇතැම් නිලධාරීන්ගේ සේවා ස්ථානයන්හි වෙනස්කම් සිදුව ඇති බැවින් හා එවැනි සේවා ස්ථානයක සේවය කරන නිලධාරියෙකු හට 2027 වාර්ෂික ස්ථාන මාරු යටතේ ස්ථාන මාරු ලබා දී ඇත්නම්, එම නිලධාරියා මේ වන විට සේවය කරන සේවා ස්ථානය වෙත ඔහුගේ / ඇයගේ අනුප්‍රාප්තික නිලධාරියා වාර්තා කළ යුතු වේ. ප්‍රාදේශිය කාර්යාලවලට ස්ථාන මාරු ලබාදී ඇති නිලධාරීන් ප්‍රධාන කාර්යාලය වෙත  වාර්තා කිරීමෙන් අනතුරුව අදාළ ප්‍රාදේශිය කාර්යාලයට යොමු කළ යුතු අතර, එවැනි නිලධරයෙකු ප්‍රධාන කාර්යාලයෙහි රඳවා නොගෙන ඔහුට/ ඇයට ලබාදී ඇති ප්‍රාදේශිය කාර්යාලය වෙත අනුයුක්ත කිරීමට ආයතන ප්‍රධානී විසින් කටයුතු කළ යුතු වේ.



එන්.යූ. නිෂාන් මෙන්ඩිස්
ඒකාබද්ධ සේවා අධ්‍යක්ෂ ජනරාල්


| | |
|---|---|
| ඊ තැපැල් ලිපිනය | dgcs.pubad@gmail.com |
| දුරකතන අංකය | 0112694560 |
| ෆැක්ස් අංකය | 0112692254 |

රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා සහ පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | Combined Services Division
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතනය / தொலைபேசி: 011- 2696211-13 Telephone
ෆැක්ස් / தொலைநகல்: 011- 2695279 Fax
ඊ- මේල් / மின்னஞ்சல்: info@pubad.gov.lk E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: www.pubad.gov.lk Web Site

මගේ අංකය / எனது இல / My No: COM/Trans/V/ඒ.ස්.මා./2027

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2026.10.02

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**2027 வருடாந்த இடமாற்றங்கள் - (இணைந்த சேவை)**
**அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவை, இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை, இலங்கை அரசாங்க நூலகர் சேவை, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை, இணைந்த சாரதிகள் சேவை, அலுவலக உதவியாளர் சேவை**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடமாற்றங்கள் **2027.01.01** ஆம் திகதி அல்லது அலுவலர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் பிரகாரம் அனுமதி அளிக்கின்றேன். இது தொடர்பாக தங்கள் அமைச்சின்/ திணைக்களத்தின்/ அலுவலகத்தின் உரிய அலுவலர்களுக்கு அறிவித்து, குறித்த திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்குமாறு அவர்களுக்கு அறிவிக்கவும். அரசாங்க சேவை ஆணைக்குழு / தேர்தல் ஆணைக்குழு ஆகிய இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள அலுவலர்களின் இடமாற்றங்கள், உரிய தாபனத் தலைவர்களின் உடன்பாட்டிற்கு உட்பட்டே நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்பதையும் அறிவிக்கின்றேன்.

02. இணைந்த சேவையின் இடமாற்றக் கட்டளைகளுக்கு உட்பட்ட யாதேனுமொரு அலுவலருக்கு, தங்கள் அமைச்சின் / திணைக்களத்தின் / அலுவலகத்தின் நிறுவப்பட்டுள்ள உள்ளக இடமாற்றக் குழுக்களின் மூலம் இடமாற்றக் கட்டளைகள் வழங்கப்படக்கூடாது. யாதேனும் காரணத்தினால் உள்ளக இடமாற்றங்களுக்கான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருப்பின், அங்கு இணைந்த சேவையின் இடமாற்றக் கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறிருந்தபோதிலும், அலுவலர்களின் கோரிக்கையின் அடிப்படையில் அமைச்சு / திணைக்களம் / அலுவலகத் தேவைகளின் அடிப்படையில் அமைச்சுக்கள் / திணைக்களங்கள் / அலுவலகங்களால் வழங்கப்பட்டுள்ள இடமாற்றக் கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என தாங்கள் கருதினால், இக்கடிதத்தின் 06 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் தங்களின் பரிந்துரைகளுடனும் சேர்த்து உரிய கோரிக்கை தொடர்பில் மேலதிக அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளவும்.

03. யாதேனும் அலுவலரொருவருக்கு 2027 வருடாந்த இடமாற்றக் கட்டளைகளின் மூலம் வேறு இடமாற்றக் கட்டளையொன்று வழங்கப்பட்டிருந்தால் மாத்திரம், இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட வருடாந்த இடமாற்றக் கட்டளையொன்று செல்லுபடியற்றதாகிவிடும் எனக் கருதுதல் வேண்டும்.

04. இவ் இடமாற்றங்களை மேற்கொள்ளும்போது இடமாற்றக் குழுவின் மூலம் பின்பற்றப்பட்ட இடமாற்ற நடைமுறை, 2026.07.31 ஆம் திகதிய இலக்கம் 04/2026 இனைக் கொண்ட இணைந்த சேவைகள் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அச்சுற்றறிக்கையில் அல்லது இலக்கம் 2310/29 அதிவிசேட வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் (தொகுதி 1) XVIII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தங்களது இடமாற்றக் கோரிக்கைகள் தொடர்பில் வருடாந்த இடமாற்றக் குழுவின் கவனம் செலுத்தப்படவில்லை எனில் மட்டும், வருடாந்த இடமாற்ற முன்மொழிவு மறுபரிசீலனைக் குழுவிடம் மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்க முடியும்.

05. அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் இலக்கம் PSC/APL/07/14/2013 மற்றும் 2013.09.13 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளின் பிரகாரம், வருடாந்த இடமாற்ற மறுபரிசீலனைக் குழுவின் தீர்மானம் வழங்கப்பட்ட பின்னர் மீண்டும் மேற்கொள்ளப்படும் மேன்முறையீடுகள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் தீர்மானங்கள் வழங்கப்படும். அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள், மனக்குறைகள் காரணத்தினாலோ அல்லது திணைக்களத் தலைவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையிலோ வருடாந்த இடமாற்றத் தீர்மானங்கள் உரிய திகதிக்குப் பிந்திய காலத்திற்கு ஒத்திவைக்கப்பட மாட்டாது. வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பிலான மேன்முறையீடொன்றிற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் வழங்கப்பட்ட தீர்மானங்கள், அத்தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தடுக்கும் கட்டளையொன்று இல்லாதிருப்பின், உடனடியாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

06. இணைந்த சேவையின் அனைத்து அலுவலர்களும் வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பான மேன்முறையீடுகளைச் சமர்ப்பிப்பதற்கு இணையத்தில் நுழைவதற்கு **https://misco.pubad.gov.lk/misco** எனும் இணைய முகவரியைப் பயன்படுத்த வேண்டும். நிகழ்நிலை மென்பொருளுக்குள் (Online Application) நுழைந்து, தங்களது மேன்முறையீட்டை 2026.10.16 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். அவ் விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதியொன்றை தாபனத் தலைவரின் மூலம் வருடாந்த இடமாற்ற மறுபரிசீலனைக் குழுவிற்கு அனுப்பி வைக்குமாறும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

07. 2027 வருடாந்த இடமாற்றத் தீர்மானங்களின் கீழ் தங்களது அலுவலகத்திலிருந்து வெளியே இடமாற்றப்படவுள்ள மற்றும் தங்களது அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்று வரவுள்ள இணைந்த சேவையின் அலுவலர்களின் பெயர் விபரப் பட்டியல்கள், நிகழ்நிலை மென்பொருளின் **Transfer -- Report** என்பதன் கீழ் **"Transfer Report – I"** மற்றும் **"Transfer Report – II"** ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறே தங்களது அமைச்சு / திணைக்களத்திலிருந்து வெளியே இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ள அலுவலர்களை, **பதிலீட்டாளர்கள் வரும் வரை தடுத்து வைக்காது** உரிய திகதியில் புதிய சேவை இடத்தில் கடமைகளைப் பொறுப்பேற்கக் கூடியவாறு விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவிப்பதுடன், இவ்விடமாற்றங்கள் தாமதமின்றி நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்பதையும் அறிவிக்கின்றேன். முறைப்படியான அனுமதியின்றி இவ்விடமாற்றக் கட்டளைகளைப் புறக்கணித்துக் கொண்டிருக்கும் அலுவலர்கள் தொடர்பில் இலக்கம் 04/2026 இணைந்த சேவைகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் வருடாந்த இடமாற்றக் கொள்கையின் பிரிவு 8 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதையும் அறிவிக்கின்றேன்.

08. தற்போது கடமையாற்றும் சேவை இடத்தில் குறிப்பிட்ட காலத்தைப் பூர்த்தி செய்யாத அலுவலர்களுக்கு இவ்வருடாந்த இடமாற்றங்களுக்காகப் பயணச் செலவுகள் வழங்கப்பட மாட்டாது. குறிப்பிட்ட காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் தொடர்பில் தாபனவிதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு பயணச் செலவுகள் செலுத்தப்படல் வேண்டும். நாள்படிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட மாட்டாது.

09. அமைச்சுக்களின் பாடப்பரப்பு மாறியுள்ளமையின் அடிப்படையில் சில அலுவலர்களின் சேவை இடங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையினால் மற்றும் அத்தகைய சேவை இடமொன்றில் கடமையாற்றும் அலுவலரொருவருக்கு 2027 வருடாந்த இடமாற்றத்தின் கீழ் இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பின், அவ் அலுவலர் தற்போது கடமையாற்றும் சேவை இடத்திற்கு அவருடைய பதிலீட்டு அலுவலர் அறிக்கையிட்டிருத்தல் வேண்டும். பிரதேச அலுவலகங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள அலுவலர்கள் தலைமை அலுவலகங்களுக்கு அறிக்கையிட்ட பின்னர் உரிய பிரதேச அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அலுவலரொருவரைத் தலைமை அலுவலகத்தில் தடுத்து வைக்காமல் அவருக்கு வழங்கப்பட்டுள்ள பிரதேச அலுவலகத்திற்கு இணைப்பதற்கு தாபனத் தலைவரினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

ஒப்பம்/ என்.யு. நிஷான் மெண்டிஸ்

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

மின்னஞ்சல் முகவரி dgcs.pubad@gmail.com
தொலைபேசி 0112694560
தொலைநகல் 0112692254